# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் வழக்க நிலை (தொழில்நுட்பம்) தேர்வு (1204)

## 1. மதிப்பீட்டின் நோக்கங்கள்

இப்பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஏற்கெனவே மாணவர் அடைந்துள்ள அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர்கள் பெற்றிருப்பர். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். மதிப்பீட்டின் நோக்கங்கள் பின்வருமாறு அமையும்:

### 1.1 கேட்டல்

1 எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 1.2 பேசுதல்

1 தமிழில் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்

### 1.3 படித்தல்

1 பல வகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து சரியான உச்சரிப்புடன் வாய்விட்டுப் படித்தல்

2 பல வகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

### 1.4 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

1 பல்வேறு தலைப்புகளில் தம் கருத்துகளையும், உணர்வுகளையும், நோக்குகளையும் சரளமாகவும் தெளிவாகவும் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

### 1.5 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

1 கொடுக்கப்படும் தலைப்புகளில் தம்முடைய கருத்துகளைச் சரியாகவும் பொருத்தமாகவும் தெளிவாகவும் எழுதுதல்

## 2. தேர்வு அமைப்புமுறை

இத்தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1: (50 நிமிடங்கள், 30 மதிப்பெண்கள், 30%)**

இத்தாள் ‘அ’, ‘ஆ’ என்னும் இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் இரண்டு உரைநடைப் பகுதிகளையொட்டி ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**‘ஆ’ பிரிவு (கருத்து விளக்கப்பட மற்றும் வாசிப்புக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 3 பகுதிகள் இடம்பெறும்.

பகுதி 1
இப்பகுதியில் ஒரு கருத்து விளக்கப்படக் கருத்தறிதலையொட்டி (எ.டு.நடைமுறையிலுள்ள செய்தி**,** விளம்பரம்) இரண்டு தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

பகுதி 2
இப்பகுதியில் ஒரு வாசிப்புக் கருத்தறிதல் பனுவலையொட்டி (நடைமுறையிலுள்ள நாட்டு நடப்பு, சமூகப் பண்பாட்டு நிகழ்வுகள்) மூன்று தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

பகுதி 3
இப்பகுதியில் சமூகத் தொடர்புடைய விளம்பரத் தகவல்களைக் கொண்ட ஒரு கருத்து விளக்கப்படக் கருத்தறிதலையொட்டி ஐந்து வினாக்கள் கேட்கப்படும். அதில் வினாக்கள் மூன்று வகைகளாக அமையும்.

| | |
|---|---|
| முதல் வகை: | இரண்டு தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். |
| இரண்டாம் வகை: | ஒரு சுயவிடை வினாவிற்கு விடை எழுதுதல் வேண்டும். |
| மூன்றாம் வகை: | கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு குறுந்தகவல்/வாழ்த்து-அட்டை/அழைப்பிதழ்/மின்னஞ்சல் போன்ற பலவகை அமைப்புகளில் சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும். |

**<u>வினாத்தாள் 2</u>: (50 மதிப்பெண்கள், 50%)**

**வாய்மொழித் தேர்வு**

இத்தேர்வு கீழ்க்காணும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியது.

1 வாய்விட்டு வாசித்தல்

2 ஒளிக்காட்சி ஊக்கக்கூறு (video stimulus) துணைகொண்டு உரையாடுதல்

**1 வாய்விட்டு வாசித்தல்**

கணினித்திரையில் இடம்பெறும் ஓர் உரைநடைப் பகுதியை மாணவர் வாய்விட்டு வாசிக்க வேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசை நயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2 ஒளிக்காட்சி ஊக்கக்கூறு துணைகொண்டு உரையாடுதல்**

மாணவர் கொடுக்கப்படும் ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்க வேண்டும். அந்த ஒளிக்காட்சி 55-60 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும். பின்னர், தேர்வாளருடன் அதன் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலில் சரளம், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**<u>வினாத்தாள் 3</u>: (20 மதிப்பெண்கள், 20%)**

**கேட்டல் கருத்தறிதல்**

செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் நான்கு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரே தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை. பனுவல்களையும் வினாக்களையும் செவிமடுத்த பின்னர் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். கேட்டல் கருத்தறிதல் தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 30 நிமிடங்கள்.

## 3. தேர்வு விவர அட்டவணை

### சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் வழக்க நிலை (தொழில்நுட்பம்) தேர்வு (1204)

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் (மதிப்பளவு) |
|---|---|---|---|---|
| 1<br><br>(50<br><br>நிமிடங்கள்) | **<u>கருத்தறிதல் மற்றும் மொழிப் பயன்பாடு</u>**<br><br>**‘அ’ பிரிவு**<br>**முன்னுணர்வுக் கருத்தறிதல் 1 & 2**<br>- 2 பனுவல்கள் (மொழிப்பயன்பாடு) | தெரிவுவிடை வினாக்கள் | 5 | 30(30%)<br><br>10 (10%) |
| | **‘ஆ’ பிரிவு**<br>- கருத்தறிதல் 3 | தெரிவுவிடை வினாக்கள் | 2 | 4 (4%) |
| | - கருத்தறிதல் 4 | தெரிவுவிடை வினாக்கள் | 3 | 6 (6%) |
| | - கருத்தறிதல் 5 | தெரிவுவிடை வினாக்கள்<br>&<br>சுயவிடை வினாக்கள் | 2<br><br>2 | 4 (4%)<br><br>6 (6%) |
| 2 | **<u>வாய்மொழி</u>** | | | 50 (50%) |
| | 1. வாய்விட்டு வாசித்தல்* | சுயவிடை | 1 | 20 (10%) |
| | 2 உரையாடல் (ஒளிக்காட்சி ஊக்கக்கூறையொட்டி அமைதல்) | | 1 | 30 (30%) |
| 3 | **<u>கேட்டல் கருத்தறிதல்</u>** | | | 20 (20%) |
| | கேட்டல் கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 10 | 20 (20%) |

** கணினித்திரையில் இடம்பெறும் பகுதி*